# 2019–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி (11.10.2019) வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம், தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை, வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் ஆடுவதை செய்யும் இடம், கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் இதர இனங்களுக்கான குத்தகைதாரர்கள் இம்மாநகராட்சிக்கு செலுத்தப்படும் குத்தகை தொகையில் 15% தொகையை சேவை வரியாக 30.06.2017 வரை செலுத்தி வந்தனர். மேற்படி சேவை வரியை மத்திய கலால் மற்றும் சுங்க வரித்துறை அலுவவகத்திற்கு மாநகராட்சியால் செலுத்தப்பட்டு வந்தது. மத்திய கலால் மற்றும் சுங்க வரித் துறையினர் 24.10.2018–ல் இம்மாநகராட்சியில் 01.03.2013 முதல் 31.03.2017 வரையான காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரித் தொகைக்குரிய பதிவேடுகள் மற்றும் கோப்புகளை ஆய்வு செய்து, மேற்படி காலத்திற்கு சேவைவரி ரூ.2,06,21,548– செலுத்தப்பட வேண்டும் என show cause notice வழங்கினர்.

மேற்படி சேவை வரி செலுத்தப்படாமைக்கான show cause notice மீதான விசாரணை 21.02.2019 அன்று நடைபெறுவதால் சேலம் சேவை வரி அலுவலகத்தில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டது. விசாரணையின் போது சேவை வரி சம்பந்தமான அரசு விதிகள் மற்றும் சுற்றறிக்கை ஆகியவற்றை சமர்ப்பித்து சேவை வரியிலிருந்து விலக்கு பெறுவதற்கு உரிய முறையில் விளக்கம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததால், சேவை வரி ஆலோசகர் திரு. கே. சங்கர்நாராயணன் அவர்கள் சேவை வரி தொடர்பாக 21.02.2019 அன்று நடைபெற்ற விசாரணையில் மாநகராட்சி சார்பாக சேவை அலுவலகத்தில் ஆஜராகி அதற்கான விளக்கங்களை உரிய அறிக்கையாக 21.02.2019–ல் சமர்ப்பித்துள்ளார். இனிவருங்காலங்களில் மேற்படி விசாரணையில் சேவை வரி ஆலோசகர் கலந்து கொண்டு மாநகராட்சி சார்பாக உரிய அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

மேற்படி சேவை வரி விசாரணைக்கு மாநகராட்சி சார்பாக சேவை வரி ஆலோசகர் திரு. கே. சங்கர்நாராயணன் அவர்கள் சேவை வரி அலுவலகத்தில் கலந்து கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க மாநகராட்சியின் சேவைவரி ஆலோசகராக நியமனம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000–க்கும் மாமன்ற தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மேற்படி சேவை வரி தொடர்பாக சேலம் சேவை வரி அலுவலகத்தில் நடைபெறும் விசாரணையில் மாநகராட்சி சார்பாக சேவை வரி ஆலோசகர் திரு. கே. சங்கர்நாராயணன் அவர்கள் கலந்து கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க மாநகராட்சியின் சேவைவரி ஆலோசகராக நியமனம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000–க்கும் மாமன்ற தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/1564/2013

**128.** அ.கு அனுமதிக்கப்பட்டது.

2. அரசு ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணமாக தொகை ரூ.5000/- வழங்கப்பட்டதை தற்போழுது அரசாணை எண். 240, நிதித்துறை நாள்: 02.08.2019-ல் ரூ. 10000/- ஆக உயர்வு செய்து வழங்கிட உத்திரவிடப்பட்ட அரசாணை மாமன்றத்தில் பதிவு செய்ய மாமன்ற தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

கோப்பு எண். பி7/5161/2019

**129. பதிவு செய்யப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சியின் மேயர் மற்றும் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துவதற்கு, செயலாளர் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அவர்களின் ந.க.எண்.2047/2019/ந.தே.1 நாள்.22.08.2019–ன்படியும், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.4172/2019/உ.தே1 நாள்.03.09.2019–ன்படியும் வாக்குச் சாவடிகள் அமைத்தல், வரைபடம் தயாரித்தல், வாக்காளர் பட்டியல் அச்சு செய்தல், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்குச் சாவடி அலுவலர்கள் நியமித்தல், வாக்குச் சாவடியில் தேவையான வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் வாக்குகள் எண்ணும் மையம் அமைத்தல், மின்னனு வாக்குப் பதிவு இயந்திரங்கள் கர்நாடகா மாநிலத்தின் மைசூர் நகரத்தில் இருந்து ஈரோடு மாநகராட்சிக்கு எடுத்துவருதல் போன்ற தேர்தல் பணிகள் மேற்கொள்வற்கும் மேற்கண்ட தேர்தல் சம்பந்தமான பணிகள் செய்வதற்கும், அதற்கான செலவினங்கள் மேற்கொள்வதற்கும், செலவினத் தொகையினை வழங்குவதற்கும் மாநகராட்சியின் நிதியிலிருந்து ரூ. 5.00 லட்சம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலகக் குறிப்பு :-

உள்ளாட்சித் தேர்தல் பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(2348/2016/சி4)

**130. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

4. ஈரோடு நெடுஞ்சாலைத் துறை உட்கோட்ட எல்லையில் சாலையோரம் அமைந்துள்ள பலன்தரும் மரங்களின் பலாபலனை அனுபவிக்கும் உரிமையை 01.07.2019 முதல் 30.06.2020 முடிய பசலியாண்டிற்கான குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொகையினை 20.09.2019–க்குள் செலுத்துமாறு பார்வையில் காணும் உதவிக் கோட்டப் பொறியாளரின் 27.08.2019–ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எ ண். | மண்டலம் | சாலைப் பகுதி | குத்தகை தொகை | சரக்கு மற்றும் சேவை வரி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | SGST 9% | CGS T 9% | |
| 1. | I | தொப்பூர் – மேட்டூர் – பவானி – ஈரோடு சாலை கி.மீ. 90/6–93/ 984 | 558 | 50 | 50 | 658 |
| 2. | I | ஈரோடு – பெருந்துறை – காங்கயம் சாலை கிமீ 2/4–4/4 | 178 | 16 | 16 | 210 |
| 3. | I | தொப்பூர் – மேட்டூர் – பவானி – ஈரோடு சாலை கி.மீ. 87/4–90/6 | 356 | 32 | 32 | 420 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | I | தொப்பூர் – மேட்டூர் – பவானி – ஈரோடு சாலை கி.மீ. 82/6–87/4 | 373 | 34 | 34 | 441 |
| 5. | I | ஊட்டி – கோத்தகிரி சாலை – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு சாலை கி.மீ.153/4–155/4 | 498 | 45 | 45 | 588 |
| 6. | I | ஈரோடு – சத்தி இணைப்புச் சாலை சேலம் கொச்சின் சாலை (தே.நெ) கிமீ 0மீ0–1/4 | 295 | 27 | 27 | 349 |
| 7. | II | ஊட்டி – கோத்தகிரி சாலை – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு சாலை கி.மீ.156/4–161/626 | 81 | 7 | 7 | 95 |
| 8. | II | ஊட்டி – கோத்தகிரி சாலை – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு சாலை கி.மீ.155/4–156/4 | 62 | 6 | 6 | 74 |
| 9. | III | ஈரோடு – பெருந்துறை – காங்கயம் சாலை கிமீ 4/4–8/4 | 299 | 27 | 27 | 353 |
| 10. | IV | ஈரோடு – முத்தூர் சாலை கிமீ 1/8–3/6 | 194 | 17 | 17 | 228 |
| 11. | IV | ஈரோடு – சென்னிமலை சாலை கிமீ 0/0–3/2 | 211 | 19 | 19 | 249 |
| 12. | IV | மல்லிக்கரை – ராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலை கிமீ. 94/660–95/4 | 251 | 23 | 23 | 297 |
| | | மொத்தம் | 3356 | 303 | 303 | 3962 |

மேற்படி பகுதியில் உள்ள மரங்களின் எண்ணிக்கையை கணக்கீடு செய்யப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு 569 புளியமரங்கள் உள்ளன.

| வ. எண். | சாலையின் பெயர் | புளிய மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சித்தோடு (மாநகராட்சி எல்லை) முதல் ஈரோடு சூளை பஸ்நிலையம் வரை மற்றும் ராசாம்பாளையம் பிரிவு ரோடு | 433 |
| 2. | ஈரோடு சூளை பஸ்நிலையம் முதல் ஈரோடு வீரப்பன்சத்திரம் மாரியம்மன் கோவில் வரை | 73 |
| 3. | காலிங்கராயன் வாய்க்கால் முதல் (பெருமாள் மலை மற்றும் அக்ரஹாரம் ரோடு) மூலப்பட்டரை வரை | 57 |
| 4. | சென்னிமலை ரோடு அரசு ஐ.டி.ஐ. எதிரில் | 1 |
| 5. | ஹெம்மிங்வே மார்க்கெட் ரோடு (பழைய கரூர் ரோடு) முதல் வெண்டிபாளையம் வரை | 5 |
| | மொத்தம் | 569 |

மேற்படி சாலையோர பலன்தரும் மரங்களுக்கான பசலி ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.3962–ஐ நெடுஞ்சாலைத்துறைக்கு செலுத்துவதற்கு மாமன்ற தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

தற்பொழுது மண்டலம்-2 பகுதியில் ஈரோடு சூளை பஸ்நிலையம் முதல் ஈரோடு வீரப்பன்சத்திரம் மாரியம்மன் கோவில் வரை உள்ள 73 மரங்களுக்கு (ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்புற உட்கோட்ட எல்லைக்குட்பட்ட பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவிக்கும் உரிமத்திற்கு (ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபி-ஈரோடு சாலை கி.மீ. 160/6-159-2. மற்றும் 159/2-156-2)) பொது ஏலத்தின் மூலமாக 2019-2020-ம் ஆண்டிற்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மரங்களை தவிர்த்து மீதமுள்ள மரங்களை **2020–2021–**ம் ஆண்டிற்கான குத்தகை இனங்களில் சேர்த்து பொது ஏலம் கோருவதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(அ) மேற்படி சாலையோர பலன்தரும் மரங்களுக்கான பசலி ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.**3962–**ஐ நெடுஞ்சாலைத்துறைக்கு செலுத்துவதற்கு மாமன்ற தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

(ஆ) மண்டலம்-2 பகுதியில் ஈரோடு சூளை பஸ்நிலையம் முதல் ஈரோடு வீரப்பன்சத்திரம் மாரியம்மன் கோவில் வரை உள்ள 73 மரங்களை தவிர்த்து மீதமுள்ள மரங்களை **2020–2021–**ம் ஆண்டிற்கான குத்தகை இனங்களில் சேர்த்து பொது ஏலம் கோருவதற்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/5131/2018

**131. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

5. ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் (Smart City Mission: 2017-18), Signboards அமைத்தல் பணிகளில் Supply and Erection of Uniform City Signage Program which consist of Supply and erection of Retro Reflctive (Type XI) Signboards in ABD area in Erode Smart City பணியினை ரூ.1.55 கோடியில் மேற்கொள்ளுவதற்கு தீர்மான எண். 06.13, ஆறாவது கூட்டம் நாள் 28.06.2019 அன்று தலைவர், ஈரோடு ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்களால் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியிணை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.1.55 கோடியில் , மத்திய அரசு பங்கு 50 சதவீதம், தமிழக அரசு பங்கு 50 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25477/2017/DO1, நாள்: 28.08.2019-ல் ரூ.155.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering மற்றும் மூடி முத்திரையிட்ட முறையில் இரு உறை அமைப்பில் 27.09.2019 அன்று ரூ.155.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) M/s. Rishi Enterprises,
2) M/s. Sri Balaji Associates,
3) Thiru. S.T. Selvam

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளையும் 30.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி மட்டும் தகுதி வாய்ந்ததாக உள்ளது.

1) M/s. Rishi Enterprises

எனவே மேற்கண்ட தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளியினை 04.10.2019-அன்று மதியம் 3.30 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s. Rishi Enterprises | (+) 4.76 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற தகுதிவாய்ந்த ஒரே ஒரு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட தகுதிவாய்ந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+)4.76 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s. Rishi Enterprises நிறுவனத்தினர் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/444/2018-ன்படி கேட்பு அறிவிப்பு 04.10.2019 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 09.10.2019 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளியும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.76%** சதவீதத்தில் கோரியுள்ள **M/s. Rishi Enterprises** நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

1) மேற்படி ஸ்மார்ட் சிட்டி திட்டப்பணிக்கு முதலாம் அழைப்பில் வரப்பெற்ற தகுதிவாய்ந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) **4.76** % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி **M/s.Rishi Enterprises** நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண் : E1/444/2018

**132. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட **60** வார்டுகளை மறுவரையறைக் குழு பரிந்துரையின்படி, மறுவரையறை செய்யப்பட்டு **60** வார்டுகளின் நான்கு எல்லைகள் குறித்த விபரங்களை ஈரோடு மாவட்ட அரசிதழ் எண்.**50** நாள்.**14.12.2018** ல் வெளியிடப்பட்டுள்ளதால், ஏற்கனவே அமையப் பெற்ற வார்டுகள் குழு / மண்டலம் அலுவலகங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது.

ஆகவே ஈரோடு மாநகராட்சியில் மறு வரையறை செய்யப்பட்ட **60** வார்டுகளை ஒருங்கிணைத்து கீழ்க்கண்டுள்ளவாறு வார்டுகள் குழுக்கள் / மண்டலம் (Ward Committee / Zone) அமைக்கலாம்.

| வரிசை எண். | வார்டு குழுக்கள் / மண்டலத்தின் பெயர்கள் | ஒதுக்கீடு செய்யப்படும் வார்டுகள் |
|---|---|---|
| 1 | மண்டலம் – 1 (15 வார்டுகள் ) | 1, 2, 3, 4, 6, 7, 13, 14, 15, 16, 17, 23, 24, 25, 26 |
| 2 | மண்டலம் – 2 (15 வார்டுகள் ) | 5, 8, 9, 11, 12, 18, 20, 21, 22, 27, 28, 29, 35, 36, 37 |
| 3 | மண்டலம் – 3 (15 வார்டுகள் ) | 10, 19, 30, 31, 32, 33, 34, 44, 45, 46, 47, 48, 49, 50, 51 |
| 4 | மண்டலம் – 4 (15 வார்டுகள் ) | 38, 39, 40, 41, 42, 43, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60 |

ஈரோடு மாநகராட்சியில் மேற்கண்டுள்ளவாறு வார்டுகள் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ள வார்டு குழுக்கள் / மண்டலங்கள் (Ward Committee / Zone) விவரங்களை அரசின் ஒப்புதல் பெற மாமன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அனுமதிக்கலாம். (சி4/2348/2016)

**133. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 க்குட்பட்ட வார்டு எண். 31 டைனி வில்லேஜ் பகுதியில் மண் சாலையை தார் சாலையாக மாற்றியமைத்து மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 20.00 இலட்சத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் –2018–2019 கீழ் பணி மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க. எண். 1579/2018/அ5. நாள்.12.07.2018ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 20.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இப்பணிக்கான 1 சதவீத டேவணித் தொகையினை ஒப்பந்ததாரர்கள் இருவரும் செலுத்தியுள்ளார்கள். எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கப்பட்டதின் விவரம் பின்வருமாறு

| | |
|---|---|
| திருவாளர்கள். கே.எம். ஆர். அன் கோ | 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| திருவாளர்கள். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்ஷன் | 0.35% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (–) 0.03% குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். கே.எம்.ஆர். அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி செய்தமைக்கு பின்னேற்பு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மேற்படி பணி பாராளுமன்ற தொகுதி நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு பின்னேற்பு வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/2498 /2018

**134. பின்னேற்பு வழங்கப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம் ரீ.ச.எண்.1013/1 இல் 2.785 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி டி.பாலகிருஷ்ணன் என்பவரின் விண்ணப்பம் நாள்.08.05.2018 - ன்படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 21/2019 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண். 5743/2019 நாள்.16.09.2019 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சிக்கு தானசாசனம் வழங்கியது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 558/19/இ1

**135.** **பதிவு செய்யப்பட்டது.**

9. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 (வார்டு எண்.60)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்கள் 16/8,9ஏ,9பி-2.75 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு , வரன்முறை வேண்டி மனுதாரர் திரு.ஜெயபிரகாஷ் வர்மா என்பவர் உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 39/2019 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு இணை சார்பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.5995/2019 பதிவு நாள்.26.09.2019 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சிக்கு தானசாசனம் வழங்கியது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 1068/19/இ1

**136.** **பதிவு செய்யப்பட்டது.**

10. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்கள். 882/4APart,4B Part - இல் 0.88 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு , வரன்முறை வேண்டி மனுதாரர்.திரு.ஆர்.கோபால் மற்றும் இருவர் ஆகியோரின் விண்ணப்ப நாள்.01.06.2018-ன்படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 73/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.5979/2019 பதிவு நாள்.25.09.2019 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சிக்கு தானசாசனம் வழங்கியது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 5393/18/இ1

**137.** **பதிவு செய்யப்பட்டது.**

11. ஈரோடு மாநகராட்சி - மண்டலம்-4 - ஈரோடு "இ" கிராமம் - நத்தம் புல எண்.1869-ன் மொத்தப்பரப்பு 0.43.30 ஹெக்டேர் பூமியில் 0.02.02 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தினை ஈரோடு நகர மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்நிலையம் கட்டுவதற்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சியின் தரப்பிலிருந்து ஆட்சேபனையில்லை என கருத்து வழங்குமாறு தெரிவித்து வருவாய் வட்டாச்சியர் ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.7729/அ2 நாள்.20.09.2019 நாளின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி - மண்டலம்-4 - வார்டு எண். 60-க்குட்பட்ட ஈரோடு வட்டம் - ஈரோடு "இ" கிராமம் - நத்தம் புல எண்.1869-ன் மொத்தப்பரப்பு 0.43.30 ஹெக்டேர் பூமியில் 0.02.02 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் ஈரோடு நகர மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்நிலையம் கட்டுவதற்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சியின் தரப்பிலிருந்து எவ்வித ஆட்சேபனையில்லை என்ற விபரம் தெரிவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்.

அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையாளர் மற்றும் தனிஅலுவர் அவர்களின் முன் அனுமதியை எதிர்நோக்கி ஆட்சேபனை இல்லா சான்று வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .

கோப்பு எண். 2095/19/இ1

**138. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–**3** ஈரோடு ரிடி., சூரம்பட்டி சப்டி., ஈரோடு வட்டம், சூரம்பட்டி கிராமம், முன் ரீ.ச.**83/1** தற்போது சப்டிவிஷன்படி ரீ.ச.**83/IB2** இதில் எனக்கு மீதமுள்ள **878.66** சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனைநிலைத்தில் ஈரோடு உள்ளூர் திட்டக்குழு கோப்பு எண். **112/2019** ஈ.உதிகு–**2**ன்படி வழங்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ளதும், இந்த தானப் பத்திரத்திற்கு கட்டுப்பட்டதுமான தென்வடல் சாலைக்கு செக்குப்பந்தி விபரம்.

ரீ.ச.எண். **83/IB2**-ல் அமைந்துள்ள **30** அடி அகல நிலையில் உள்ள கிழமேல் மாநகராட்சி தார்ச் சாலைக்கும் – தெற்கு, ரீ.ச.எண். **83/6**–ல் உள்ள **12** அடி அகல கிழமேல் பாதைக்கும் –வடக்கு, ரீ.சஎண். **83/IB2** –ல் எனக்கு மீதமுள்ள இடத்துக்கும் –கிழக்கு, ரீ.ச.எண்.**83/IB2**-ல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் வகையறாவுக்கும் – மேற்கு,

இதன் மத்தியில் வடபுறமும், தென்புறமும் கிழமேலாக **7.01** மீட்டர், மேல்புறமும், கிழபுறமம் தென்வடலாக **39.62** மீட்டர், இந்தவகை அளவுள்ள **277.74** சதுர மீட்டர் பரப்பளவுள்ள தென்வடல் சாலையும், அதன் வடமேற்கு மூலையில் விடப்பட்டுள்ள ரோடு வளைவு **1.16** சதுர மீட்டரும் சேர்த்து ஆக மொத்தம் **278.90** சதுர மீட்டர் பரப்பளவுள்ள தென்வடல் சாலை பூராவும் சகிதம்.

மேற்கண்ட சாலையினை ஈரோடு மாநகராட்சிக்கு **20 /09/2019** அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். **1/2740 / 2019** –ன்படி பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலையினை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். இ2/1924/2019

**139. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் (Smart City Mission: 2017-18), Providing MCC No.16, Jeeva Nagar in Ward No:17, and V.O.C Park in Ward No.28 with Processing Capacity of 2TPD in Zone II Area பணிகள் ரூ.2.01 கோடியில் மேற்கொள்ளுவதற்கு 20.11.2018ம் தேதியன்று ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் வார்டு எண்:17 ஜீவா நகரில் MCC பணியினை மேற்கொள்ள இயலாத காரணத்தால், அப்பணியினை மேற்கொள்ள மாற்று இடமாக வார்டு எண்: 16 ஆசிரியர் காலனியில் (மாமரத்துப்பாளையம்) மாநகராட்சிக்கு சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு அவ்விடத்தில் பணி தொடங்கப்பட்ட நிலையில் அப்பகுதி பொதுமக்களால் இத்திட்டப்பிணை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் இ.ம.எண்:5/2019 மற்றும் அ.வ.எண்:322/2019 என்ற வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. எனவே தற்சமயம் மேற்படி இடத்தில் MCC பணியினை மேற்கொள்ள இயலாத காரணத்தினாலும், மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படுவதினாலும், மேலும் இப்பணி பொதுசுகாதாரப் பணியை அடிப்படையாக கொண்டதாலும் பணியின் அவசிய அவசரம் கருதி மாற்று இடமாக ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி பூங்கா வளாகத்தின் ஒரு பகுதியில் அதே ஒப்பந்ததாரர் திருவாளர். S.V & Co அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் வார்டு எண்: 16 ஆசிரியர் காலனியில் (மாமரத்துப்பாளையம்) MCC பணியினை மேற்கொள்ள ஆட்சேபனை தெரிவித்து தொடரப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு பெறப்பட்ட பின் அவ்விடத்தில் மாற்று திட்டத்தின் மூலம் பணியினை மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:**

1. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படுவதினாலும், உரிய காலக்கெடுவிற்குள் பணியினை நிறைவு செய்யவேண்டியுள்ளதாலும், மேலும் இப்பணி பொதுசுகாதாரப் பணியை அடிப்படையாக கொண்டதாலும் பணியின் அவசிய அவசரம் கருதி மாற்று இடமாக ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி பூங்கா வளாகத்தின் ஒரு பகுதியில் அதே ஒப்பந்ததாரர் திருவாளர் S.V & Co அவர்களின் அதே மதிப்பிட்டு விலை விகிதத்தின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: இ1/444/2018-2

**140. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சி மண்டலம்1–க்குட்பட்ட வார்டு எண்.15 மாநகராட்சிக்கு சொந்தமான விநாயகர் கோயில் வீதி ஆரம்பப்பள்ளியில் மேற்குபுறமுள்ள பழைய கட்டிடம் பழுதடைந்துள்ளது மற்றும் கிழக்குபுறம் உள்ள சிமெண்ட் அட்டை பொருத்திய கட்டிடம் பழுதடைந்துள்ளது. மேலும் மழைக்காலங்களில் மாணவ மாணவிகளுக்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி பள்ளியில் உள்ள கட்டிடங்களுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 14.80 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:–**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: இ1/1922/2019

**141. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

15. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சுமார் 148 மெ.டன் திடக்கழிவுகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் 35 மெ.டன் மக்கும் குப்பைகள் தற்போதுள்ள நுண்ணுயிர் கூடங்களில் உரமாக்கப்பட்டு வருகிறது மற்றும் 70மெ.டன் வரையிலான மக்கும் குப்பைகள் நுண்ணுயிர் கூடங்களுக்கு அனுப்பப்படவுள்ளது. இது தவிர மறு சுழற்சிக்கு 10டன் கழிவுகள் அனுப்படுகிறது. மற்றும் 10 டன் வரையிலான உயிரி கழிவுகள் Bio methanation Plant-க்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில் மறு சுழற்சிக்கு பயன்பாடாமல் உள்ள உலர் கழிவுகள் உரக்கிடங்குகளில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு கொட்டப்பட்டு வரும் உலர் கழிவுகளை கையாள்வது மிகுந்த சிரமமாக உள்ளது.

இந்நிலையில் பொது சுகாதாரத்தின் நலனைக் கருதி உரக்கூடங்களிலுள்ள உலர் கழிவுகளை எரித்து அழிக்கும் தொழில் நுட்பத்துடன் கூடியதும் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு 10 மெ.டன் Incinerator Plant - ஐ தமது சொந்த செலவில் ஈரோடு மாநகராட்சியின் வைராபாளையம் உரக்கிடங்கில் நிறுவித்தருவதாக ஒளிரும் ஈரோடு என்ற தன்னார்வ நிறுவனத்தாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதே தொழில் நுட்பத்துடன் கூடிய Incinerator Plant-கள் நசியனூர், துடியலூர் பேரூராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றில் நிறுவப்பட்டு நல்லமுறையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

எனவே பொது மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு ஈரோடு மாநகராட்சியின் வைராபாளையம் உரக்கிடங்கில் ஒளிரும் ஈரோடு அறக்கட்டளையின் சொந்த நிதியில் ரூ.65.00 இலட்சம் மதிப்பில் 10TPD Incinerator Plant நிறுவிக்கொள்ளவும் மேற்படி Incinerator Plant-ஐ மாநகராட்சி மூலம் தொடர்ந்து பராமரித்துக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. அனுமதி வழங்கலாம். கோப்பு எண்: இ1/5431/18

**142. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

16. ஈரோடு மாநகராட்சியில் Providing Bitumen Patches at EVK Sampath Road in Ward.No.28 பணியினை ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 18.06.2019 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 31.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1 திருவாளர். SELLIAMMAN CONSTRUCTIONS (P) LTD | (-) 0.05 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 1 திருவாளர். VEDHANAYAKI CONSTRUCTION | (+)0.55 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்தாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.05 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்தாரர் திருவாளர். SELLIAMMAN CONSTRUCTIONS (P) LTD நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1-1120-2019

**143. அ.கு அனுமதிக்கப்பட்டது.**